ஆண்டே ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில்தான் தனி நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு, இன்று அதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன். வருகிற 1995-96 ஆம் கல்வி ஆண்டில் இந்த வேளாண்மைப் பாடத்திட்டங்கள் பள்ளி வகுப்பில் சேர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 51, திரு. எஸ். அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

51—

நாமக்கல் பகுதியில் சூரியகாந்தி பயிரிடுவதை மேம்படுத்துதல்.

34268—திரு. எஸ். அன்பழகன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் பகுதியில் சூரியகாந்தி அதிகமாகப் பயிரிடுவதற்கு அரசு தனிமுயற்சி எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், நாமக்கல் கோட்டத்தில் சூரியகாந்தி பயிரினை அதிகமாகப் பயிரிடுவதற்கு தேவைப்படும் அனைத்து முயற்சிகளும் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்காக எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ் உள்ள இனங்களான மானியங்கள் - விதை விநியோகம், விதை கொள்முதல், சிறுதளைப்பைகள் (Mini Kits) விநியோகம் போன்றவைகளுக்காக செலவிடப்படுகின்றன.

இந்த ஆண்டு (1994-95) எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ் நாமக்கல் கோட்டத்தில் சூரியகாந்தி சாகுபடிக்கு இலக்கு 4,500 ஹெக்டேர் பரப்பு நிர்ணயிக்கப்பட்டு ரூ. 1,77,700 செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1994 நவம்பர் 8]

முற்பகல் *10-35*

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சூரியகாந்தி பயிரிடுவதில் நாமக்கல்லுக்கு அதிகமாக நிதி ஒதுக்கியதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் சூரியகாந்தி எண்ணெய் இருதய கோளாறு உள்ளவர்களுக்கு, 'ஹார்ட் பேஷன்ட்' என்று சொல்லப்படுபவர்களுக்கு எல்லாம் சிறந்த எண்ணெயாகக் கருதப்படுகிறது. அப்படி கருதப்படுகிற நேரத்திலே அதற்காக சிறப்புத்திட்டம் ஏதாவது அரசு வைத்திருக்கிறதா? அதே நேரத்தில் இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் சூரியகாந்தி எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்ய எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம் இந்த மாநிலத்தில் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மட்டும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 12 கோடியே 10 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இந்தத் தொகையைக் கொண்டு பயிரிடும் பரப்பளவு அதிகரிக்கப்படும் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தொகையைக் கொண்டு ஆதார விதைகள் உற்பத்தி செய்தல், விதைப்பண்ணைகள், கொள்முதல், விதை விநியோகம் ஆகியவற்றோடு சிறுதளைப்பைகள், ஜிப்சம் விநியோகம், நுண்ணூட்ட கலவைகள், நுண்ணுயிர் பொட்டலங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், பயிர் பாதுகாப்பு கருவிகள் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படும்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சூரியகாந்தி உற்பத்தி விதைகளை விவசாயத் துறையே விற்பனை செய்கிறதா அல்லது அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் மூலம் வினியோகம் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் அக்ரோ இன்டஸ்ரீஸ் அந்த விதைகளை வாங்க மறுக்கிறது என்பதை அரசு அறியுமா? அதற்காக அமைச்சர் அவர்கள் ஏதாவது முயற்சி செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[*1994 நவம்பர் 8*

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சூரியகாந்தி விதைகளை தமிழ்நாடு வேளாண் தொழில் கழகமும் மற்றும் இதர நிறுவனங்களும் இன்றைக்குக் கொள்முதல் செய்து வருகின்றன. 1977-ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டம், போச்சம்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள சூரியகாந்தி எண்ணெய் ஆலையில் அதனுடைய அரவைத் திறனுக்கு ஏற்ற அளவுக்கு விதை உற்பத்தி தமிழகத்திலே இல்லாத நிலை இருந்தது. சென்ற ஆண்டுதான் அதனுடைய முழு அரவைத் திறனுக்கு ஏற்ற விதைகள் அந்த ஆலைக்குக் கிடைத்திருக்கின்றன. இப்போது தமிழகத்தில் உற்பத்தி செய்யக்கூடிய சூரியகாந்தி விதைகளை தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் முழுமையாகக் கொள்முதல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ப. சரஸ்வதி.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 4,500 எக்டேர் பரப்பளவுக்கு சூரியகாந்தி பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தெளிப்பு நீர்ப் பாசனத்திற்காக 50% மானியம் வேளாண் துறை மூலம் தரப்படுகிறது. ஆனால் ஆதிதிராவிட மக்கள் மீதம் இருக்கின்ற 50 சதவீதத்தைப் போட்டு தெளிப்பு நீர்ப்பாசனத்தை உருவாக்க இயலாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் 50% மானியமாகவும், மீதமுள்ள 50 சதவீதத்தை வேளாண் துறை மூலம் கடன் உதவியாகத் தந்தால் ஆதிதிராவிட மக்கள் இன்னும் நிறைய பரப்பளவுக்கு சூரியகாந்தி பயிரிடுவதற்கு உதவியாக இருக்கும். வேளாண் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எண்ணெய் வித்துக்கள் துறை திட்டத்தின்கீழ் தெளிப்பு நீர்க் கருவிகள் இன்றைக்கு 50% மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. 50% வழங்கப்படுகின்ற மானியம் வேளாண்துறையின் சார்பிலேதான் வழங்கப்படுகிறது. மீதம் உள்ள 50%-ஐ அந்த விவசாயி தன்னுடைய கையில் இருக்கக்கூடிய பணத்தைக் கொண்டு திட்டத்தை நிறைவேற்றலாம். இல்லலையென்றால் கூட்டுறவு வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் போன்றவற்றிலிருந்து கடன் உதவி பெற்றும் திட்டத்தைச் செயல்படுத்தலாம். இத்திட்டத்தை செயல்படுத்த முன்வரக்கூடிய விவசாயிகளுக்கு இந்தத் துறை உற்ற தோழனாக இருந்து அனைத்து உதவிகளையும் செய்யும்.

1994 நவம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சூரியகாந்தி திட்டத்தில் தரம் உள்ள விதைகள் அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கப்படுவதாக அறிகின்றேன். எவ்வளவு விதைகள் அவ்வாறு வாங்கப்படுகின்றன என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது நாமக்கல் பகுதியில் அதிகமாக சூரியகாந்தி பயிரிடுவதற்கு அரசு முயற்சி எடுத்திருப்பதைப் பற்றிய கேள்வி. அதற்குத் தனிக் கேள்வி போடலாம். (குறுக்கீடு) பதில் தருகிறீர்களா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரமாக விதைகள் இருந்தால்தான் தரமான எண்ணெய் கிடைக்கும். எனவேதான் தரமான விதைகளை வேளாண் தொழில் கழகம் கொள்முதல் செய்கிறது. இன்றைக்கு தமிழகத்திலே வீரிய ஒட்டு விதைகளை முதல் முதலாக கொண்டுவந்து பயிரிடவேண்டும் என்ற புதிய திட்டத்தை இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். எனவேதான் இந்த ஆண்டு 2 கோடி ரூபாய்க்கு வீரிய ஒட்டு ரக விதைகளை நாங்கள் 'மினி கிட்டு'களாக, சிறுதளைப்பைகளாக இலவசமாக வினியோகம் செய்திருக்கிறோம் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 52, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

52—

தமிழ்நாட்டில் கிரானைட் கற்கள் கிடைக்குமிடங்கள்.

***36227*—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உயர்தர கிரானைட் கற்கள் எங்கெல்லாம் கிடைக்கிறது என்கிற ஆய்வை தமிழ்நாடு கனிம நிறுவனம் நடத்தியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?